காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic
OUR EXTREMED DOCTORS
Dr M. Rajkumar 96410 25996
Dr K. Namitha Bhanumeel 9444 288784
Dr Sathish Rajkumar 9445 401793
Dr Shanthi R 9884 650945
Dr Salina R 87780 87742
Dr Praveena E 9944 166443

தொகுதி - 6 | நாளிதழ் | 10 பக்கங்கள் சென்னை, 27 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 138

இந்தியாவின் நில ஆவணங்கள் டிஜிட்டல்மயமாக்கல் பணிகள் குறித்து இலங்கை அதிகாரிகள் குழுவுக்கு விளக்கம்



சென்னை – 27 நவம்பர், 2026 இந்தியாவின் நில நிர்வாக முறைகளை டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் நவீனப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து இலங்கை அதிகாரிகள் குழுவுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் நில வளங்கள் துறை, இந்தியா வந்துள்ள இலங்கை அரசு அதிகாரிகள் குழுவுடன் இன்று (26.11.2026) கலந்துரையாடியது. தேசிய நல்லாட்சி மையம் ஒருங்கிணைத்த இந்தப் பயணத்தில், இலங்கையின் கூடுதல் நில ஆணையர் குணவர்தன தலைமையிலான குழுவினர் யங்கேற்றனர்.

இந்திய நில வளங்கள் துறைச் செயலர் திலீப் குமார், டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் நில நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை விரைவான சேவை ஆகியவற்றை மேம்படுத்துவதன் அவசியத்தை எடுத்துரைத்தார். நில ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்குவது வெளிப்படையான, திறன் வாய்ந்த, மக்கள் நலன் சார்ந்த நிர்வாகத்திற்கு அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

நில வளங்கள் இயக்குநர் ஷியாம் குமார், டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்கள் நவீனமயமாக்கல் திட்டம், நக்ஷா திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார். மேலும், நிலப் பதிவுகளுடன் சொத்துப் பதிவு முறையை இணைத்தல், காகிதமில்லா பதிவு, தானியங்கி பெயர் மாற்றம் ஆகியவை குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.